# <u>திட்டத்தின் விவரம்</u>

<u>திட்டம் :–</u>
தமிழ்நாட்டில் சென்னை மாநகரத்தில் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தல் நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000ன் படி நகராட்சி திடக்கழிவுகளை உரமாக மாற்றுதல் மற்றும் எரிகட்டிகளாக மாற்றுதல் ஆகிய பதனிடுதல் திட்டங்களை நிறைவேற்றவும் மற்றும் சுகாதார குப்பை கொட்டும் தளங்களை அமைத்து செயலாக்கும் திட்டம்.(ஒவ்வொரு தொழிலகமும் தினசரி 350 டன் குப்பைகளை கையாள வல்ல திறன் பெற்றதாக மொத்தம் 1400 டன் குப்பைகளை கையாள 4 தொழிலகங்களை கொண்ட திட்டம்)

<u>பயன்படுத்தப்படும் தொழில் நுட்பம் :</u>
காற்றில்லா நிலையில் உயிரியல் ரீதியில் குப்பையினை உரமாக மாற்றுதல் மற்றும் குறுகிய காலத்தில் மக்கக்கூடிய கழிவுகளை எரிகட்டிகளாக மாற்றுதல் மற்றும் குப்பையில் உள்ள க ற்களைக்கொண்டு கட்டுமான செங்கற்கள் தயாரித்தல்

<u>தொழில் முனைவோர்</u>
திருவாளர்கள்.ஹைட்ரோஎர் டெக்டானிக்ஸ்,116, ரகேஜா ஆர்கேட், செக்டார் 11, பிளாட்–61 பேலாப்பூர், நாவி மும்பை 400 614.தொலைபேசி 022–27564347/27564777

தொழில்நுட்பத்தின் நிலை : தொழில் நுட்பங்கள் நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000ன் படி மற்றும் பாரத உச்ச நீதி மன்றத்தின் தொழில்நுட்பக்குழுவின் பரிந்துரைகளின்படியும் மற்றும் நகர வளர்ச்சி அமைச்சகம், புது டில்லி அவர்களின் துறைகளுக்கிடையேயான செயல்பாடுகள் அமைப்பின் பரிந்துரைகளின்படியும்

நகராட்சி திடக்கழிவுகளிலிருந்து உரம் மற்றும் எரிகட்டிகளை தயாரிக்க விரைவாக செயல்படும் உயிரியல்ரீதியில் குப்பையினை மக்கவைக்கும் முறை மற்றும் மின்சாரம் தயாரிக்கும் முறை மற்றும் க ற்கூளங்களை கொண்டு கட்டுமான செங்க ற்கள் தயாரிக்கும் முறை.

பதனிடுதல் செயல்பாட்டின் இயக்க முறை :—

ஆண்டு முழுவதும் குப்பைகளை பெறுவதும்  பதனிடுதலும் நடைபெறும்

– தரம்பிரித்தல், எருவாக மாற்றுதல், எரிகட்டிகள் தயாரித்தல், மின்சாரம் தயாரித்தல், சந்தைப்படுத்துதல், எருவினை விற்றல் மற்றும் மக்காத குப்பைகளை சுகாதார நிலப்பரப்பில் களைதல்

– திட்டத்தின் செயல்பாடுகள், அளிக்கப்பட்ட நிலப்பரப்பினை சீராக்குதல், விளக்கு வெளிச்ச வசதிகளை ஏற்படுத்துதல், குழாய் வசதிகள் அமைத்தல், மின்சார கம்பி வடங்கள் அமைத்தல், உட்புற சாலைகள் அமைத்தல் ஆகியவைகளை உள்ளடக்கும்.

– நுழைவாயில் கட்டுப்பாடு முறைகள், கழிவுகளை பெறுதல், உணவு கழிவுகள், உலர் கழிவுகள், பிளாஸ்டிக் மற்றும் இன்ன பிற கழிவுகள் என்று கழிவுகளை வகைப்படுத்தி பிரித்தெடுத்தல்.

– மக்கக்கூடிய கழிவுகளை சுகாதாரமுறையில் சுத்திகரித்தல், உயிரியல் ரீதியில் நிலைப்படுத்துதல் மற்றும் நொதிக்கவைத்தல்.

– உலர்கழிவுகளை எரிகட்டிகளாக மாற்றுதல்

– நொதித்தலின் மூலம் குப்பையை மக்க வைத்து அதிலிருந்து எரிவாயு தயாரித்து பின்னர், அந்த தொழில்நுட்பத்தில் எஞ்சிய கழிவுகளை எருவாக மாற்றுதல்

திட்டத்தில் அடங்கியுள்ள சுற்றுச்சூழல் இனங்கள்

– துர்நாற்றம் மற்றும் விஷவாயு  வெளிவருவதை கட்டுப்படுத்துதல்
– பூச்சிகள், பிராணிகள், ஈக்கள் ஆகியவைகளை கட்டுப்படுத்துதல்
– தூசி மற்றும் தூசிக்கிருமிகளை கட்டுப்படுத்துதல்
– தீப்பிடித்தல்  மற்றும் அதனால் வரும் புகை ஆகிவைகளை கட்டுப்படுத்துதல்

தொழில்நுட்பத்தின் நம்பகத்தன்மை

– மக்கக்கூடிய கழிவுகள் மாசு ஏற்படுத்துவதிலிருந்து  தீர்வு காணுதல்
– பதனிடுதல் முறை மாசு ஏற்படுத்தாதது
– அனைத்து வகையான மண்ணையும் வளப்படுத்தும் தாவர உரம் தயாரிக்க உதவும். மேலும் எரிபொருளாக பயன்படும் எரிகட்டிகள் தயாரிக்க வல்லது.

சென்னை மாநகராட்சிக்கு இத்திட்டத்தால் கிடைக்கும் பயன்கள்

- நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000 மற்றும் பிற முறைபடுத்தும் விதிகள் நிறைவேற்றப்படும்
- குப்பை கொட்டும் வளாகத்தை பராமரிக்க ஆகும் செலவினம் சேமிப்பாகும்.
- குப்பை கொட்டும் வளாகத்தின் பயன்பாட்டு காலம் மேலும் 6 முதல் 8 மடங்கு அதிகரிக்கும்
- பொதுநல வழக்குகள், நோய்கள், துர்நாற்றம் மற்றும்  நிலத்தடி நீர் மாசுபடுதல் போன்ற  சுற்றுச்சூழல் பாதிப்புகள், தவிர்க்கப்படும்.
- துப்புரவு பணியாளர்கள், மற்றும் குப்பையை மறுசுழற்சி செய்பவர்கள், ஆகியவர்களுக்கு பணி செய்வதற்கு உகந்த பணிசூழல் ஏற்படும்.
- குப்பையின் காரணமாக குப்பை கொட்டும் வளாகத்திற்கு அருகாமையில் உள்ளவர்களுக்கு தொல்லை ஏற்படாது.
- சென்னை நகரின் மேன்மையை பாதுகாக்கும்.
- இயற்கை வளங்களை பாதுகாத்தல்

- சுற்றுச்சூழலுக்கு ஏற்றவகையிலும் இந்திய மற்றும் உலக தரத்திலும் இயங்கும் திட்டம்
- தொழிற்சாலையின் உற்பத்தி திறனை அதிகரிக்கும் வழிவகைகள் மற்றும் அல்லது உருவாகும் குப்பையின் தன்மையில் ஏற்படும் மாறுபாடுகளில் ஏற்படும் பிர ச்சனைகள் குறைவாக இருத்தல்
- தேசிய திட்டங்களுடன் மீட்கப்பட்ட கழிவுகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களை உற்பத்திக்கு ஒருங்கிணைத்தல்

<u>திட்டத்தில் தொழில் முனைவோரின் பங்கு</u>

- ஆண்டு முழுவதும் அவர்களுக்கு வழங்கப்படும் கழிவுகளை பெற்று சுத்திகரித்தலை தடையின்றி நிறைவேற்றுதல்
- சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாடு வாரியம் ஆகியவர்களின் முறைப்படுத்தும் விதிகளின்படி திட்டத்தினை சுகாதாரமாக இயக்குதல் மற்றும் பராமரித்தல்
- குப்பையிலிருந்து தயாரிக்கப்படும் எரு மற்றும் எரிகட்டிகள் மற்றும் பிற தயாரிப்புகளை தொழில்நுட்பக்குழு மற்றும் நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை ம ற்றும் கையாளல்) விதிகள் 2000ன் படி தயாரித்தல். அவைகள் திருவாளர்கள்.ஹைட்ரோஏர் டெக்ட்டானிக்ஸ்(பிசிடி) லிமிட்டட், மும்பை அவர்களின் உடமையாக இருக்கும்.
- உரிய அறிக்கைகளை தயாரிப்பதும் மற்றும் அவைகளை சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளுக்கு உரிய காலத்தில் சமர்ப்பித்தல்
- உரிய பதிவுறுக்களை மற்றும் புள்ளி விவரங்களை பராமரித்தல் மற்றும் தேவையான நேரத்தில் திட்டம் செயல்படுவதை பார்வையிட வசதிகள் ஏற்படுத்துதல்.

<u>சென்னை மாநகராட்சியின் பங்கு</u>

- திட்டம் செயல்படும் தொழிற்சாலை இடத்திற்கே தினசரி 1400 மெட்ரிக் டன் குப்பையினை வழங்குதல்
- திட்டத்தை செயலாக்க 30 ஏக்கர் நிலப்பரப்பை பயன்படுத்த அனுமதி வழங்குதல்
- திட்டத்திற்கு தேவையான மின்சாரம், குடிநீர் கழிவு நீர் இணைப்புகள் போன்ற வசதிகளை பெறுவதற்கு தொழில்முனைவோருக்கு தேவையான தடையின்மை சான்றிதழ்கள் வழங்குதல்.

<u>நகராட்சி திடக்கழிவுகளிலிருந்து பெறப்படும் மற்றும் தயாரிக்கப்படும் பொருட்கள்</u>

- மண்ணின் தன்மைக்கேற்ற எரு
- எரிகட்டிகள்
- பிளாஸ்டிக்/உலோகங்கள்/ கண்ணாடி மற்றும் இன்ன பிற
- கற்கூளங்களைக் கொண்டு சுற்றுச்சூழலுக்கு ஏற்ற கட்டுமான செங்கற்கள்

<u>குப்பையிலிருந்து தயாரிக்கப்படும் உரம்</u>

- குப்பையிலிருந்து தயாரிக்கப்படும் உரம் நிலத்தில் உள்ள வளத்தன்மையினை அதிகரிப்பதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்
- இந்த உரம் இரசாயன உரத்தின் திறனை அதிகரிக்கும் மற்றும் மண்ணின் ஈரப்பதத்தை அதிகரிக்கும்.
- இந்த எரு மண்ணின் தன்மையை நிலைபடுத்தும்

எரிகட்டிகள்–எரிபொருள்

- குப்பையில் உள்ள எரியும் திறன்கொண்ட பொருள்கள் எரிகட்டிகளாக மாற்றப்படும். இது பல்வேறு வழிகளில் இருந்து எரிபொருள் பெறும் தேவையை குறைக்கும்.
- இவ்வாறு தயாரிக்கப்படும் எரிகட்டிகளின் எரியும் திறன் ஒரு கிலோவிற்கு 3200 முதல் 3800 கலோரிகள் என்று இருக்கும். கரிமங்கள் 10 முதல் 12 சதவிகிதமாகவும் மற்றும் துத்தநாகம் 0.07 சதவிகிதத்திற்கு குறைவாகவும் மற்றும் சாம்பலின் கலவை 20 முதல் 25 சதவிகிதமாகவும் இருக்கும்.

கட்டுமான செங்கற்கள்

கட்டுமான செங்கற்களை வேலிச்சுவர்கள், நடைபாதைகள், பொது பூங்காக்கள் ஆகியவைகளை அமைக்க பயன்படுத்தலாம்.

நகராட்சி திடக்கழிவுகள் பதனிடுதல் மற்றும் களைதல் வசதிகள் கொண்ட திட்டம் நிலம், உள்கட்டமைப்பு மற்றும் பயன்பாட்டு வசதிகள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டத்தின் அளவு | : | நாள் ஒன்றுக்கு 1400 மெட்ரிக் டன் குப்பையை கையாளும் திறனுடையது |
| 2. | தேவைப்படும் மொத்த நிலப்பரப்பின் அளவு | : | 30 ஏக்கர் |
| 3. | மின்சார தேவை | : | 1200 எச்.பி |
| 4. | நீரின் தேவை | : | 1200 கிலோ லிட்டர்/ஒரு நாளைக்கு |
| 5. | தேவைப்படும் நுகர் பொருட்கள் | | |
| | டீசல் | : | 1.5 லிட்டர்/ ஒரு மெட்ரிக் டன் குப்பைக்கு |
| | மின்சாரம் | : | 0.5 யூனிட்/ ஒரு மெட்ரிக் டன்னுக்கு |
| | சுத்திகரிப்பு பொருட்கள் | | |
| | துர்நாற்றத்தை போக்கும் இயற்கை தாவரங்களில் இருந்து தயாரிக்கப்படும் மருந்து | : | 50 மில்லி லிட்டர்/ஒரு மெட்ரிக் டன் குப்பைக்கு |
| | எருவின் மக்கும் திறனை அதிகரிக்கும் பொருட்கள் | : | 1 கிலோ/ஒரு மெட்ரிக் டன் குப்பைக்கு |